**வீரகெடிய பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வீரகெடிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஆண்டுகளின் போது பல்வேறு தரப்பினரினால் பிரதேச சபைக்கு காணி உறுதிகளின் மூலம் சாட்டப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 913,625 தொகைக்கான 29 காணிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த 33 சொத்துக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 686,240 தொகையின் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 கட்டிடங்களின் கூட்டுப் பெறுமதியாகிய ரூபா 6,763,967 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 237,110 தொகை குறைவாக கணக்கீடு செய்திருந்தது. | ஆண்டிற்கான வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்குகள் தயாரித்த பின்னர் பணம் கிடைத்திருந்தால் கணக்கிற்கு எடுக்கப்படவில்லை. |
| (v) | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த மந்திரிமார் ஏற்பாடுகளில் இருந்து சபையின் இயந்திரங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட 05 பாதைகளுக்காக ரூபா 525,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கடன் கொடுத்தோரின் பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | சபையின் இயந்திரங்களைப் பயன்படுத்திய போதிலும் இயந்திர உபகரணங்களுக்காக தனியாக நடைமுறைக் கணக்கு ஒன்று பேணப்படுவதால் கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 5,754,964 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 213,577 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டணை திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்தேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 470,291,634 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | சொத்துக்கள் பதிவேடு முறைப்படி நாளதுவரை ஆக்கப்பட்டு மற்றும் விரிவான அட்டவணை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக)விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விரைவாக தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/1 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 57 கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | அனைத்து உடன்படிக் கைகளும் நாளது வரை ஆக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | நகர அபிவிருத்தி மற்றும் சமூக பூமி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணையில் உபபிரிவு (1)(V) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப் பட்டுள்ள செலுத்துகை டவர்களுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | செலுத்துகை டவர்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டு அபிவிருத்தி அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,601,699 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,040,909 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,740,000 | 1,909,941 | 1,364,750 | 4,966,389 | ,1782,500 | 1,883,302 | 2,237,777 | 4,447,880 |
| வாடகை | 17,356,000 | 17,165,685 | 16,308,004 | 3,206,486 | 14,401,800 | 13,680,993 | 13,516,772 | 2,556,651 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,787,000 | 1,724,170 | 1,688,086 | 126,367 | 1,520,900 | 1,744,575 | 1,745,417 | 96,158 |
| ஏனைய வருமானங்கள் | 10,153,000 | 13,261,847 | 5,742,832 | 32,969,481 | 12,014,000 | 11,940,798 | 4,947,136 | 19,654,715 |
| மொத்தம் | 56,537,200 | 34,061,643 | 25,103,672 | 41,268,723 | 29,719,200 | 29,249,668 | 22,447,102 | 26,755,404 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு வருமான நிலுவை ரூபா 26,775,404 தொகையாக இருந்ததுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 34,061,643 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 60,817,047 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 25,103,672 தொகையாகக் காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 41 சதவீதம் காணப்பட்டடது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மாகாண சபையில் இருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 32 மில்லியன் தொகை ஆக காணப்பட்டமையால் பாரிய நிலுவையொன்றினைக் காட்டியதுடன் விரைவாக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித் துள்ளது. அது கிடைத்த பின்னர் முன்னேற்றம் 85% சதவீதமாகும். |

### 2.2.3 வீதிவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 4,447,880 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,909,941 தொகை ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 6,357,821 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,364,750 தொகையாகக் காணப்படாமையால் வீதவரி மற்றும் வரி வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 21 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | வீதவரி அறவீடு செய்யும் முன்னேற்றத்தை அதிகரிக்க வேண்டும். | வீதவரி சேகரிக்கும் முன்னேற்றத்தில் அதிகரிப்பதற்கு விஷேட வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 4,938,581 தொகையாகக் காணப்பட்டதுடன், நிலுவையை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணம் வருமானம் ரூபா 1,787,000 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 1,724,170 தொகையாகும். இதன் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் 96 சதவீதம் மாத்திரம் சிட்டையிடப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | உண்மையாக காணப்படும் இடங்களுக்காக சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடுவேன். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 680,358 தொகை மற்றும் ரூபா 32,289,123 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதி மன்றத்தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 திகதி வரை 17 விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணை விதி ஆக்கப்படாத 13 விடயங்களில் 10 இற்கான அதிகாரம் வழங்கியிருக்காததுடன் ஏனைய விடயங்களுக்காக வேறு அரச நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் விதமாக வேலைத் திட்டங்கள் தயாரித்து ஏற்பாடுகள் செலவிடப்பட்டது. |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டின் போது 03 முகாமைத்துவத் தகவல் முறைமைகள் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 317,250 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை உரிய முறையில் செயற்படுத்தப் பட்டிருக்காததுடன் அவற்றை பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி செய்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த முறையை பொறுத்தமான விதத்தில் அபிவிருத்தி செய்து உயர்ந்த செயற்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டும். | பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடியுள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆண்டிற்கான வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் பெறும் போது செலுத்தியிருந்த ரூபா 63,679 இற்கான தண்டப்பணம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத் தர்களிடம் தண்டப் பணத்தை அறவீடு செய்ய வேண்டும். | விடுவிப்பு அனுமதிப்பத்திரம் என்பதினால் பல வருட காலம் முதல் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக் கவில்லை. எனினும் 2018 ஆண்டின் போது வருமான அனுமதிப்பத்திரம் பெற்ற போது நிலுவைத் தொகைக்கான தண்டப் பணம் அறவிடப்பட்டதினால் சபை நிதியத்தில் இருந்து தண்டப் பணம் செலுத்தப்பட்டது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 04 மிகைப் பதவியணியினை முறைப்படுத்து வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகைப் பதவிகளை முறைப்படுத்துதல் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப் பட வேண்டும். | 10 ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக செயற்படுவதுடன் மீதியான 05 வெற்றிடங்களுக்கு ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையின் 5 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக கடமைகளில் ஈடுபடுத்தியிருந்தனர். | உத்தியோகத்தர் களை அங்கீகரிக்கப் பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் அத்தியவசியக் கடமைகளில் ஈடுபடுத்தியிருந்ததுடன் புதிய ஊழியர்கள் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட கடமைகள் சாட்டப்படும். |
| (இ) | சேவையை விட்டுச் சென்றுள்ள, இறந்துள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 11 உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 237,066 தொகை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்ய வேண்டும். | ஊழியர் கடன் தவணைப் பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வலஸ்முள்ள சிறப்பு சந்தை கடைகளுக்காக 2017 ஜுன் 29 திகதி கிடைத்திருந்த பெறுமதி மதிப்பீட்டு வாடகையின் படி வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப் பட வேண்டும். | முதலமைச்சரின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2018 அக்தோபர் வரை 50 சதவீதம் குறைத்து அறவிடப் பட்டதுடன் அதன் பின்னர் பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 67 மயானங்களின் சட்டரீதியான உரிமை 2018 திசெம்பர் 31 திகதி வரை உரித்தாக்கியிருக்கவில்லை. | காணிகளின் உரிமையை உரித்தாக்க வேண்டும். | 67 மயானங்களில் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### 3.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டின் போது ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தகனகூட கட்டிடத்தை பயன்படுத்தாமல் செயற்படாது காணப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தற்போது தகனகூடத்தின் அத்தியவசியமான விடயங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட் டுள்ளமையால் விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருமான விடயங்களின் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 6,822,656 தொகையாக இருந்ததுடன், அவை 20 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது, | நடைமுறை சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | வாடகை வருமானத்தை 50 சதவீதம் அறவீடு செய்தல் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் கிடைக்காமையால் வருமானம் குறைந்துள்ளது. |
| (ஆ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,379,358 தொகையான சேமிப்புக் காணப்பட்ட துடன், அத்துடன் அவை 27 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக சிக்கனமாக பண்டங்கள் பயன்படுத்தப்படாமையால் செலவுத் தலைப்புகளில் பணம் சேமிக்கப்பட்டது. |